21.01.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழக பட்டு வளர்ச்சித் துறையில் 300 ஆய்வாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு**

தமிழக பட்டு வளர்ச்சித்துறையில் காலியாக உள்ள உதவி பட்டு ஆய்வாளர் பணிகளுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் விருப்பமும் உள்ள பட்டு வளர்ப்பு தொடர்பான செய்முறை பயிற்சி அனுபவத்தை அரசு பட்டு வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் பெற்றவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிக்கை எண்: 01/2016

**பணி: உதவி பட்டு ஆய்வாளர்**

காலியிடங்கள்: 43

சம்பளம்: மாதம் ரூ.9,300 - 34,800 - தர ஊதியம் ரூ.4,200

வயதுவரம்பு: 01.07.2015 தேதியின்படி 18 - 30க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: தாவரவியல, விலங்கியலை முதன்மை பாடமாகக் கொண்டு பி.எஸ்சி பட்டம் பெற்று பட்டு வளர்ப்பில் 6 மாதங்களுக்கு குறையாமல் செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும் அல்லது கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பட்டு வளர்ப்பில் முதுகலை பட்டயப் படிப்பில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

**பணி: இளநிலை பட்டு ஆய்வாளர்**

காலியிடங்கள்: 257

சம்பளம்: மாதம் ரூ.5,200 - 20,200 + தர ஊதியம் ரூ.2,400

வயதுவரம்பு: 01.07.2015 தேதியின்படி 18 - 30க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: பள்ளியிறுதி வகுப்பில் பொது அறிவியலை ஒரு பாடமாக கொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது பட்டு வளர்ப்பில் 6 மாதங்களுக்கு குறையாமல் செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும் அல்லது ஓசூர், அரசு பட்டு பயிற்சிப் பள்ளியில் பட்டதாரி அல்லாதவர்களுக்கான 6 மாத பட்டு வளர்ப்பு பயிற்சியினை வெற்றிகரமாக பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ.500.

விண்ணப்பிக்கும் முறை: www.sericultureexam.com என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைன் விண்ணப்ப பிரிண்ட் அவுட்டை அனுப்ப வேண்டிய அஞ்சல் முகவரி:

இயக்குநர், தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித் துறை, சேலம்-7

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி: 27.01.2016

ஆன்லைனில் விண்ணப்பித்த விண்ணப்ப பிரிண்ட் அவுட் சென்று சேர கடைசி தேதி: 28.01.2016

தேர்வு நடைபெறும் தேதி: 07.02.2016

மேலும் முழுமையான விவரங்கள் அறிய www.sericultureexam.com என்ற இணையதளத்தை பார்க்கவும்.

**உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் சாதனை**

நூறு லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் கூடுதலாக உணவு தானியம் உற்பத்தி செய்து தமிழகம் சாதனை படைத்திருப்பதாக ஆளுநர்

பாராட்டுதெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் உரையில் கூறப்பட்டிருப்பதாவது:- புதுமையான முயற்சிகள் மூலம் வேளாண் துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இதனால் 2006-07 முதல் 2010-11 வரையிலான 5 ஆண்டு காலத்தில் உணவு தானிய உற்பத்தியில், மாநிலத்தில் எட்டப்பட்ட முந்தைய உயர் அளவான 82.64 லட்சம் மெட்ரிக் டன் அளவை விஞ்சி, கடந்த 4 ஆண்டுகளில் 3 முறை 100 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் கூடுதலாக உற்பத்தி செய்து, தமிழகம் சாதனை படைத்துள்ளது. உயர்ந்த அளவு உணவு தானிய உற்பத்தியையும், பயிறு உற்பத்தியையும் எட்டியதற்காக மத்திய அரசின் க்ரிஷி கர்மான் விருதை இரு முறை தமிழகம் பெற்றுள்ளது. 2014-15-ஆம் ஆண்டிலும் அதிகபட்ச சிறுதானிய உற்பத்தியை எட்டியதற்கான விருதை தமிழகம் பெற்றது. மேலும், பண்ணை உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயைப் பெருக்கவும், தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான விரிவாக்கச் சேவைகள் அளித்ததற்காக, தேசிய மின் ஆளுமை தங்கப் பதக்கத்தையும் 2014-15-ஆம் ஆண்டில் தமிழகம் பெற்றுள்ளது. செம்மை நெல் சாகுபடி முறை, பயிர் பலவகையாக்கம், உயர் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல் ஆகியவை மூலமாக நெல் உற்பத்தியில் 44 சதவீதமும், மக்காச் சோளம் உற்பத்தியில் 42 சதவீதமும், பயிறு வகைகள் உற்பத்தியில் 45 சதவீதமும் வேளாண் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது. இதனை உலக வங்கி பாராட்டியுள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

**நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற...**

புதுக்கோட்டை: நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற ஊட்டச்சத்துக் கரைசல் இரு முறை தெளித்தல்,ஜிப்சம் உரமிடுதல் போன்ற பணிகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டுமென

வேளாண்துறைஅறிவுறுத்தியுள்ளது.

ஊட்டச்சத்துக் கரைசல் : நிலக்கடலைப் பயிர் பூக்கும் வேளையில் பூக்கள் உதிர்வதைத் தடுக்கவும் பூக்கள் அதிக அளவில் பூக்கவும் ஊட்டச்சத்துக் கரைசல் இலைவழியாகத் தெளிப்பது சிறந்ததாகும். ஊட்டச்சத்துக் கரைசல் தயாரித்தல்: ஏக்கர் ஒன்றுக்குத் தேவையான ஒரு கிலோ டி.ஏ.பி., 400 கிராம் அமோனியம் சல்பேட், 200 கிராம் போராக்ஸ் ஆகிய மூன்று உரங்களையும், தெளிப்பதற்கு முதல் நாள் இரவே ஏறத்தாழ 15 லிட்டர் நீரில் ஊறவைத்து அவ்வப்போது நன்கு கலக்கிவிடுதல் வேண்டும். மறுநாள் காலையில் இக்கரைசலை வடிகட்டியபிறகு கிடைக்கும் தெளிந்த கரைசலை மட்டும் (ஏறத்தாழ 13 லிட்டர்) எடுத்து அதனுடன் தேவையான அளவு நீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாகத் தயார் செய்தல் வேண்டும். இக்கரைசலைக் கைத்தெளிப்பான் மூலம் விதைத்த 25-ஆம் நாள் ஒரு முறையும், பின்பு 10 நாட்கள் கழித்து 35-ஆம் நாள் ஒரு முறையும் என இருமுறை இலைகள் நன்கு நனையுமாறு தெளித்தல் வேண்டும். இக்கரைசலுடன் பிளானோபிக்ஸ் எனும் பயிர் வளர்ச்சி ஊக்கியை ஏக்கர் ஒன்றுக்கு 140 மில்லி அளவில் கலந்தும் தெளிக்கலாம். ஊட்டச்சத்துக் கரைசலின் பயன்கள்: இதனால் பூக்கள் உதிர்வது தடுக்கப்படுகிறது. பூக்கள் அதிக அளவில் பூப்பதற்கு உதவுகிறது. நன்கு திரட்சியான பொக்கற்ற காய்கள் நிறைய பிடித்து நல்ல மகசூல் கிடைக்கிறது. பயிர் நன்கு வளர்ச்சி பெற்று பூச்சி,நோய்களை எதிர்க்கும் தன்மையைப்பெறுகிறது.

இறவைக் கடலைக்கு ஜிப்சம் இட இதுவே சரியான தருணம்: பயிரிடப்பட்டுள்ள இறவை நிலக்கடலையில், விதைத்து 45 நாட்கள் வயதுடைய பயிரில் இரண்டாம் முறை களையெடுத்து ஜிப்சம் இட்டு மண் அணைக்கும் வேளையிது. ஜிப்சம் இட்டு மண் அணைப்பதால் விழுதுகள் நன்கு இறங்கி திரட்சியான காய்கள் கிடைக்கும். மண் அணைத்தல்: நிலக்கடலையில் உயர் விளைச்சல் பெற ஜிப்சம் இட்டு மண் அணைத்தல் எனும் தொழில் நுட்பம் மிக முக்கியமானதாகும்.

ஏன் ஜிப்சம் இடுதல் வேண்டும் ?. நிலக்கடலையில் திரட்சியான மிகுதியான காய்கள் பெற ஜிப்சம் இடுவது இன்றியமையாதது. ஜிப்சத்தில் சுண்ணாம்புச் சத்தும், கந்தகச் சத்தும் உள்ளன. நிலக்கடலை திரட்சியாக இருக்கச் சுண்ணாம்புச் சத்து தேவைப்படுகிறது. எப்போது ஜிப்சம் இடுதல் வேண்டும்? இறவை நிலக்கடலை விதைத்து 45 நாட்களில் களையெடுக்கும் சமயம் ஏக்கர் ஒன்றுக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு செடிகளைச் சுற்றி நன்கு மண் அணைத்துவிடுதல் வேண்டும். இதனால் நிலக்கடலையில் நன்கு விழுதுகள் இறங்கி காய்கள் திரட்சியாகவும், எண்ணெய்ச் சத்து மிகுந்தனவாகவும் கிடைக்கும். ஜிப்சம் இடும் வேளை வயலில் ஈரம் இருக்குமாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். எனவே, இறவை நிலக்கடலைச் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஊட்டச்சத்துக் கரைசலைத்தெளித்து, ஜிப்சம் உரமிட்டு கூடுதல் மகசூல் பெறலாம் என புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் பி. செல்வி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**வெண்டைப் பயிரிட உகந்த காலம்...!**



அரக்கோணம்: தோட்டக்கலை பயிர்களில் தினமும் பணத்தை கையில் பார்க்கக்கூடிய முக்கியப் பயிர் வெண்டைச் சாகுபடியாகும். இதற்கு சீசன் என்பதே இல்லை. எப்போதும் சந்தையில் வரவேற்பு உண்டு. அதிகம் விளையக்கூடிய நாள்களில் தேவை எங்கு இருக்கிறது என்பதை அறிந்து அந்த குறிப்பிட்ட சந்தைக்கு அனுப்பி வைத்தால் முழு மகசூலையும் பணமாக்க இயலும். பிப்ரவரி, மார்ச் மாதங்கள் வெண்டை விளைச்சலுக்கு ஏற்ற மாதங்கள். இதற்காக நடப்பு ஜனவரி மாதத்திலேயே நிலத்தை தயார் படுத்துதல் அவசியம்.

வெண்டையில் பல ரகங்கள் உண்டு. அவை கோ 2. எம்டியு 1, அர்கா அனாமிகா, அர்கா அபஹாப், பார்பானி கிராந்தி, கோ 3, பூசா சவானி மற்றும் வர்சா உப்கார் ஆகியவையாகும். கோ.பி.எச். 1 இனக்கலப்பு: இது வர்சா உப்பார் தெரிவு, பி.ஏ. 4-இன் இனக்கலப்பு. இது மஞ்சள் இலை மொசைக் நோய்க்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. சந்தைக்கு ஏற்ற வகை. பழமானது அடர் பச்சை, இளம், குறைவான நார்

மற்றும் அங்கங்கு முடிகள் காணப்படும். மகசூல் ஹெக்டேருக்கு 22.1 டன்.

கோ 1 (1976): இது ஹைதராபாத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுத்தமான ரகம். பழமானது இளம் சிவப்பு நிறம் கொண்டது. மகசூலான 90-ஆவது நாளில் ஹெக்டேருக்கு 12 டன். சதை அளவு 75 சதவீதம், நாரின் அளவு 14.06 சதவீதம்.

கோ 2 (1987): இது ஏ.ஈ. 180, பூசா சவானியன் முதல் சந்ததி இனக்காப்பு. பழத்தின் பரப்பானது குறைந்த முடிகள், வாடிக்கையாளர்கள் விரும்பும் வகை, சந்தைக்கு சிறந்தது. பழமானது நீளமாக 7-8 மேடுகள் கொண்டது. மகசூல் 15-16 டன் 90 நாள்கள். கோ 3 (1991): இது பிரபானி கராந்தி மற்றும் எம்.டி.யூன் முதல் சந்ததி இனக்கலப்பு. மகசூல் 16-18 டன் எக்டர். மஞ்சள் நிற மொசைக் நோய்க்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. மண், தட்பவெப்பநிலை: வெண்டை வெப்பத்தை விரும்பும் பயிர். நீண்ட நேர வெப்ப நாள்கள் இதற்குத் தேவை. பனி மூட்டங்களால் இதன் வளர்ச்சி பாதிக்கப்படும். குளிர் காலத்திலும், குளிர் பிரதேசங்களிலும் வெண்டை நல்ல முறையில் வளராது. வெண்டையை எல்லா மண் வகை நிலத்திலும் பயிரிடலாம். நல்ல உரச்சத்துள்ள மண்களில் மிகவும் நன்றாக வளரும். கார அமில நிலையை ஓரளவு தாங்கி வளரும். விதையும், விதைப்பும் விதையளவு: ஹெக்டேருக்கு 7.5 கிலோ நிலம் தயாரித்தல் : மூன்று முதல் நான்கு முறை நிலத்தை உழ வேண்டும். கடைசி உழவுக்கு முன் 25 டன் தொழு உரம் இட்டு, 45 செ.மீ. இடைவெளி விட்டு வரிப் பாத்திகள் (பார்சால்) அமைக்கவேண்டும்.

விதை நேர்த்தி, விதைத்தல்: விதைகளை விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன் ஒரு கிலோவுக்கு 2 கிராம் கேப்டான் அல்லது திராம் கொண்டு நேர்த்தி செய்ய வேண்டும். பின் விதைகளை 400 கிராம்

அசோஸ் பைரில்லம் கலவையுடன் கலந்து விதைக்க வேண்டும். நிழலில் ஆற வைத்த அரிசிக் கஞ்சியுடன் அசோஸ்பைரில்லம் தூளை நன்கு கலக்கவேண்டும். பிறகு இந்தக் கலவையில் வெண்டை விதையை நன்கு கலந்து அரை மணி நேரம் உலர வைக்க வேண்டும். இவ்வாறு நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை வரியில் 30 செ.மீ. இடைவெளியில் 2 விதைகள் என்ற விகிதத்தில் 2 செ.மீ. ஆழத்தில் ஊன்றவேண்டும்.

நீர் நிர்வாகம்: நட்டவுடன் நீர் பாய்ச்சவேண்டும், பிறகு வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சவேண்டும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, உரமிடுதல் : அடி உரமாக 20 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, 30 கிலோ சாம்பல் சத்து வரிகளில் ஒரு பக்கத்தில் இட்டு மண்ணுடன் நன்கு கலந்துவிட வேண்டும். நட்ட 30 நாள்கள் கழித்து மேலுரமாக 20 கிலோ தழைச்சத்து இடவேண்டும். 2 கிலோ அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போ பாக்டீரியம் நுண்ணுயிர் கலவையை 20 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து நேரடியாக மண்ணில் இட்டு, தழைச்சத்தின் தேவையை குறைத்துக் கொள்ளலாம். மேல் உரம் இட்டு மண் அணைத்து தண்ணீர் கட்டுவது மிகவும் அவசியமாகும்.

இலைவழி ஊட்டம் : ஒரு சதவீத யூரியா கரைசலை விதைத்து 30 நாள்கள் கழித்து 10 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவேண்டும். மியூரேட் ஆப் பொட்டாஷ் 17 கிராமை ஒரு லிட்டர் நீரில் கரைத்து விதைத்த 30, 45 மற்றும் 60-ஆவது நாளில் தெளிப்பதன் மூலம், விளைச்சலை அதிகப்படுத்தலாம். களைக் கட்டுப்பாடு, பின்செய் நேர்த்தி: களைகள் முளைக்கும் முன் விதைத்த மூன்றாம் நாள் ஹேக்டேருக்கு ப்ளுக்குளோரலின் 2 லிட்டர் தெளித்து உடன் நீர்ப் பாய்ச்ச வேண்டும். பிறகு விதைத்த 30-ஆம் நாள், ஒரு கைக்களை எடுக்க வேண்டும். உரப் பாசனம்: கலப்பு ரகங்களுக்கு ஊட்டச்சத்தின் அளவு தழை, மணி, சாம்பல் சத்து முறையே ஹெக்டேருக்கு 200:100:100கிகி ஆகும். இதில் 75 மணிச் சத்தை (75 கிகி மணிச்சத்து 469 கிகி சூப்பர்

பாஸ்பேட்டில் உள்ளது) அடியுரமாக அளிக்க வேண்டும். மீதமுள்ள தழை, மணி, சாம்பல் சத்து 200:25:100 கி.கி. உரப் பாசனமாக அளிக்க வேண்டும். தினமும் ஒரு மணி நேரம் நீர்ப்பாய்ச்ச வேண்டும். அதனுடன் கரையும் உரப்பாசனம் அளிக்க வேண்டும். அளவைப் பிரித்து பயிரின் ஆயுள்காலம் முழுவதும் 3 நாள்களுக்கு ஒரு முறை உரப் பாசனமாக அளிக்க வேண்டும். அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு காய்த் துளைப்பான்: வெண்டையில் காய்த்துளைப்பான் தாக்குதல் அதிகமாகக் காணப்படும். இவற்றை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த முறைகளை மேற்கொள்ளவேண்டும்.

இனக்கவர்ச்சிப் பொறி ஹெக்டேருக்கு 12 என்ற எண்ணிக்கையில் வைக்க வேண்டும். காய்ப் புழுக்களால் தாக்கப்பட்ட காய்களை சேகரித்து அழித்து விடவேண்டும். ஹெக்டருக்கு முட்டை ஒட்டுண்ணியான ட்ரைக்கோகிரம்மா ஒரு லட்சம் என்ற எண்ணிக்கையில் விடவேண்டும். கார்பரில் நனையும் தூள் 2 கிராமை ஒரு லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவேண்டும் இவற்றுடன் ஒரு லிட்டர் நீர் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது வேப்பம் கொட்டைப் பொடி 50 கிராமை ஒரு லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவேண்டும். சாம்பல் நிற வண்டைக் கட்டுப்படுத்த கார்போபியூரான் 3 ஜி. குருணை மருந்து ஹெக்டேருக்கு 12 கிலோ இடவேண்டும்.

நூற்புழு தாக்குதலைத் தடுக்க: ஹெக்டேருக்கு 400 கிலோ வேப்பம் பிண்ணாக்கு விதைக்கும் போது, உரத்துடன் கலந்து இடவேண்டும் அல்லது ஒரு ஹெக்டேருக்கு கார்போபியூரான் 3ஜி குருணை மருந்து 1 கிலோ அல்லது போரேட் 10ஜி குருணை மருந்து கிலோ இடவேண்டும்.

அசுவினிப் பூச்சியை கட்டுப்படுத்த மீதைல் டெமட்டான் 25 இசி 2 மில்லி அல்லது டெமெத்தோயேட் 2 மில்லி மருந்து இவற்றுடன் ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவேண்டும். மஞ்சள் நரம்புத் தேமல் நோய்: இது

மிகவும் அதிக அளவில் வெண்டையைத் தாக்கக் மூடிய ஒரு நச்சுயிரி நோய் ஆகும். இந்நோய் வெள்ளை ஈ என்ற பூச்சிகளால் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கு பரப்பப்படுகிறது. இப்பூச்சியை முதலில் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு 2 மில்லி வேம்பு எண்ணை, ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவேண்டும். கோடை காலத்தில் இந்நோய் மிக அதிக அளவில் வெண்டையைத் தாக்கும். இந்தப் பருவத்தில் நோயை எதிர்த்து வளரப்கூடிய பார்பானி கிராந்தி போன்ற ரகங்களைப் பயிரிடுவது நல்லது. மேலும் இந்நோயைத் தாங்கி வளரக் கூடிய ரகங்களான பார்பானி கிராந்தி, அர்கா அனாமிகா மற்றும் அர்கா அபஹாப் போன்றவற்றை சாகுபடி செய்யவேண்டும். சாம்பல் நோய் என்பதும் அடிக்கடி வெண்டையை தாக்கும் நோயாகும். இந்நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன் நனையும் கந்தகத்தூள் 2 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்த தெளிக்க வேண்டும். பிறகு 15 நாள்கள் இடைவெளியில் மறுபடியும் ஒரு முறை தெளிக்க வேண்டும். பிறகு இடைவெளியில் மறுபடியும் ஒரு முறை தெளிக்கவெண்டும். அறுவடை: நட்ட 45 நாள்களில் காய்கள் அறுவடைக்கு வரும். காய்கள் முற்றுவதற்கு முன் அறுவடை செய்து விடவேண்டும். ஒன்று முதல் 2 நாளுக்கு ஒரு முறை அறுவடை செய்வது முக்கியமாகும். மகசூல் : ஹெக்டேருக்கு 90 முதல் 100 நாள்களில் 12-15 டன் வெண்டைக் காய்கள் கிடைக்கும். வெண்டைப் பயிர் குறித்து மேலும் விவரங்கள் தேவைப்படுவோர் அந்தந்த வட்டாரங்களில் உள்ள தமிழக அரசின் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி ஆலோசனைகளை பெறலாம். மேலும் இந்த விவசாயத்திற்கு தேவையான அரசு உதவிகளையும் விவசாயிகள் துறை அலுவலர்களைக் கேட்டு பெறலாம். வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை நெமிலியை அடுத்த கீழ்வீதி கிராமத்தில் சந்தையை அரசே ஏற்பாடு செய்துள்ளது.

இங்கு விவசாயிகளால் கொண்டு வரப்படும் காய்கறிகளை அரசின் நேரடிப் பார்வையில் வணிகர்கள் கொள்முதல் செய்து சென்னை

உள்ளிட்ட மாநகரங்களுக்கு கொண்டு செல்கின்றனர். எனவே வெண்டைக்காய் பயிரை விவசாயிகள் நடப்பு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சாகுபடி செய்து பலனடையலாம்.

**தென்னைக்கு இசைவான ஊடுபயிர் கோகோ!**



திருநெல்வேலி: "சாக்லேட் மரம்' என அழைக்கப்படும் கோகோ-வை, தென்னைக்கு இசைவான ஊடுபயிராக சாகுபடி செய்து பயனடையலாம் என தோட்டக்கலைத் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, திருநெல்வேலி தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் டி. சி. கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கோகோவின் தாவரவியல் பெயர் "தியோபுரோமா கோகோ'. இது, ஐஸ்கிரீம், கேக், சாக்லேட், ஊட்டச்சத்து பானங்களின் மூலப்பொருளாக விளங்குகிறது. இதனால், அதன் தேவை அதிகரித்துள்ளது.

இசைந்த பயிர்: 50 சதவீத நிழலில் வளரும் தன்மை கொண்ட கோகோ, தென்னந்தோப்புகளில் ஊடுபயிராகப் பயிரிட மிகவும் ஏற்றது. 3 முதல் 45 ஆண்டுகள்வரை பலன் தரும். தென்னையின் நடுவே கோகோ

பயிரிடுவதால் களைகள் கட்டுப்படும்; மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படும்; மண் அரிப்பு தடுக்கப்படும். கோகோ இலைகள் உதிர்ந்து மக்குவதால், மண்ணின் அங்ககச்சத்து ஹெக்டேருக்கு 1,000 முதல் 1,200 கிலோ வரை அதிகரிக்கும். இவ்வாறு இசைவான பயிராக இருப்பதால், தென்னை மகசூல் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கிறது. தென்னந்தோப்பில் குளுமையான சூழ்நிலை உருவாகும். கோகோ பழத்தின் "ஓடு' உரமாகவும், கால்நடைத் தீவனமாகவும் பயன்படுகிறது. கூடுதல் சிரமமன்றி கோகோ சாகுபடி செய்யலாம். ஹெக்டேருக்கு ரூ. 50 ஆயிரம் வரை கூடுதல் வருமானம் கிடைக்கும். மேலும், கோகோ கன்றுகளை வழங்கும் மாண்டலிசா இண்டியா புட் நிறுவனம், அன்றைய சந்தை விலைக்கே விளைபொருளைக் கொள்முதல் செய்வதால் விற்பதில் பிரச்னை இல்லை.

சாகுபடி குறிப்பு: கிரையல்லோ, பாரஸ்டிரோ, டிரைனைடாரியா, சி.சி..ஆர்.பி-1 முதல் 7 வரையுள்ள ரகங்கள் சாகுபடி செய்யலாம். சாம்பல் சத்து நிறைந்த அங்ககச்சத்து மிகுந்த, கார அமிலத்தன்மை 6.6 முதல் 7.0 வரையிலான மண் வகை மிகவும் ஏற்றது.

கடல் மட்டத்திலிருந்து 1,200 மீட்டர் உயரம் வரையுள்ள பகுதியில் இது வளரும். 3 மீட்டருக்கு 3 மீட்டர் (10 அடிக்கு 10அடி) என்ற இடைவெளியில் பயிரிடலாம். தென்னையின் 2 மரங்களுக்கு இடையில் ஒரு கோகோ, இரண்டு வரிசைகளுக்கு இடையில் ஒரு கோகோ என நட வேண்டும். 1.5 அடிக்கு 1.5 அடி என்ற அளவில் குழியமைக்க வேண்டும்.

உர அளவு: மூன்றாம் ஆண்டு முதல் செடிக்கு ஆண்டுக்கு யூரியா 220 கிராம், சூப்பர் பாஸ்பேட் 250 கிராம், மூரேட் ஆப் பொட்டாஷ் 240 கிராம் உரங்களை ஏப்ரல், மே மாதங்களில் ஒருமுறை, ஆகஸ்ட், செப்டம்பரில் ஒருமுறை என இருமுறை பிரித்து இட வேண்டும். முதல் ஆண்டில் இதில் 3இல் ஒரு பங்கும், 2ஆம் ஆண்டில் 3இல் 2 பங்கும் இட வேண்டும்.

மானிய உதவி: முந்திரி, கோகோ மேம்பாட்டுக் கழக இயக்கக உதவியுடன், தோட்டக்கலைத் துறை ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்ககத்தின் கீழ் ஹெக்டேருக்கு ரூ. 12 ஆயிரம் மதிப்புள்ள மானிய உதவியாக 500 கோகோ கன்றுகள், பராமரிப்பு மானிய உதவி ஆகியவை வழங்கப்படுகிறது. இந்த அரிய வாய்ப்பை தென்னை சாகுபடியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அந்தந்த வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என்றார் அவர்.

**பாசனத்துக்காக கொடகனாறு அணை திறப்பு**

திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 9 ஆயிரம் ஏக்கர் நிலங்களின் பாசனத்துக்காக கொடகனாறு அணையிலிருந்து புதன்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அடுத்துள்ள கொடகனாறு அணையின் மொத்த கொள்ளளவு 434 மி.கன அடி. தற்போது 296.67 மி.க. அடி நீர் இருப்பு உள்ளது. இதையடுத்து, திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள நிலங்களின் பாசனவசதிக்காக தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

அதன்படி, மக்களவை உறுப்பினர் மு.உதயகுமார், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் ஜெயராம் ஆகியோர் அணையில் இருந்து தண்ணீரை புதன்கிழமை திறந்து விட்டனர்.

இதன் மூலம், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பாலப்பட்டி, கூம்பூர், அம்மாபட்டி, ஈசநத்தம், திருக்கூர்ணம், ஆர்.வெள்ளோடு, கல்வார்பட்டி மற்றும் பெரியமஞ்சுவெளி ஆகிய 8 கிராமங்களில் உள்ள 3,662.78 ஏக்கர் நிலங்களும், கரூர் மாவட்டத்தில் 5,337.22 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். மேலும் நீர்வரத்து மற்றும் நீர் இருப்பின் அடிப்படையில் 7

நாள்கள் இடைவெளியில், மொத்தம் 90 நாள்களுக்கு 265 மி.கன அடி நீர் திறந்து விடப்படும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் உதவி செயற்பொறியாளர் தமிழ்ச்செல்வன், இளநிலை பொறியாளர் சரவணக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ரூ. 78 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

அவிநாசியில் ரூ. 78 லட்சத்து 18 ஆயிரத்துக்கு பருத்தி ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வார ஏலத்துக்கு 3,500 பருத்தி மூடைகள் கொண்டுவரப்பட்டிருந்தன.

இதில்,ஆர்.சி.எச். ரகப் பருத்தி குவிண்டால் ரூ. 4,600 முதல் ரூ. 5,250 வரையிலும், டி.சி.எச். ரகம் குவிண்டால் ரூ. 5,000 முதல் ரூ. 5,450 வரையிலும், மட்ட ரகம் ரூ. 1,700 முதல் ரூ. 2,000 வரையிலும் விலை போனது. இதில், மொத்தம் ரூ. 78 லட்சத்து 18 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

இந்த ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர் ஆகிய பகுதிகளிலிருந்து 353 விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 20 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

**ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரம் மானியத்தில் இயந்திர நடவு**

ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரம் மானியத்தில் இயந்திர நடவு செய்ய அனக்காவூர் வட்டார விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அனக்காவூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நெல் சாகுபடியில் ஓர் புரட்சியாக இயந்திர நடவு முறையின் மூலம் வரிசை நடவு செய்வதால், சாகுபடி செலவில் ரூ.3 ஆயிரம் சிக்கனப்படுத்தப்படுகிறது.

இந்த நடவு மூலம் அதிக தூர்களுடன் கதிரில் அதிக நெல் மணிகள் பிடித்து ஹெக்டேருக்கு 9 டன் முதல் 10 டன் வரை மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.

மேலும், இயந்திர நடவு மற்றும் திருந்திய நெல் சாகுபடியை ஊக்கப்படுத்தும் விதமாக தேசிய உணவுப் பாதுகாப்பு முகமை (சஊநங) திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் (சஅஈட) திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ.2 ஆயிரம் மதிப்புள்ள இடுபொருள்கள், ஊக்கத் தொகையாக ரூ.3 ஆயிரம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

இந்நிலையில், இயந்திர நடவை மிக எளிமையாக கையாள

முடியும் என்பதை விளக்கும் விதமாக அனக்காவூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, கீழாத்தூர் க.ஆனந்தனின் நெல் வயலில் இயந்திர நடவு செய்து செயல் விளக்கமாக விவசாயிகளிடையே செய்து காட்டினார்.

அனக்காவூர் வட்டார நெல் சாகுபடியாளர்கள் இயந்திர நடவு முறையில் நடவு செய்வதன் மூலம் ஹெக்டேருக்கு அதிக மகசூல் எடுப்பதுடன், அரசின் மானியத்தையும் பெற்று பயனடையலாம் என்றார் அவர்.

மேலும் விவரங்களுக்கு அனக்காவூர் வேளாண்மை விரிவாக்க மையம், கூழமந்தல் துணை வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜன.25-ல் ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்த இலவச பயிற்சி**

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 25ஆம் தேதி காலை 9 மணிக்கு நெல், மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் மரவள்ளி பயிர்களுக்கு ஒருங்கிணைந்த உர மேலாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் என்.அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: இப்பயிற்சி முகாமில் நெல், மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் மரவள்ளி ஆகிய பயிர்கள் சாகுபடிக்கு மண்வளத்தினை கண்டறியும் வழிமுறைகள், மண்வளத்தை மேம்படுத்தும் உத்திகள், மண் வளத்திற்கேற்ற சமச்சீர் உரமிடுதல் பற்றிய தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286 266345, 266244 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் 24ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளவேண்டும்.

**விரிவாக்க சீரமைப்புதிட்டம் குறித்து வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு**

ஓமலூர் அருகேயுள்ள காடையாம்பட்டி வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவாக்க சீரமைப்புத் திட்டம் குறித்து வேளாண் விஞ்ஞானிகள், விரிவாக்க உயர் அலுவலர்கள் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

காடையாம்பட்டி வட்டாரத்தில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் விரிவாக்கச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, வேளாண் பொறியியல், வனத் துறை, பட்டு வளர்ச்சித் துறைகள் ஒருங்கிணைந்து பயிற்சி, பண்ணைப் பள்ளி, கண்டுணர்வு சுற்றுலா, செயல்விளக்கத் திடல்கள் குறித்த

பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளை, டேனிஷ்பேட்டை கிராமத்தில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் எஸ்.ஆர். வெங்கடாசலம், மாவட்ட வேளாண் துணை இயக்குநர் டி.பரணி ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ந.ராஜகோபால், வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் கே. ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் க.புனிதராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

**மருத்துவ குணங்கள் உள்ள பாரம்பரிய நெல் ரகங்களை பரவலாக்க அறிவுறுத்தல்**

லாபம் தரும், மருத்துவ குணங்கள் கொண்ட பாரம்பரிய நெல் ரகங்களை விவசாயிகளிடம் பரவலாக்க அறிவுறுத்தியுள்ளார் மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ்.

புதுகை அருகே முத்துக்காடு கிராமத்தில் புதுகை இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர்களில் ஒருவருமான சி. அப்பாவு பாலாண்டாரின் 7 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள நெல்வயல்களை அண்மையில் நேரில் பார்வையிட்ட ஆட்சியர் மேலும் கூறியது:

வறட்சியைத் தாங்கும் திறனும்,இயற்கை முறையில் விளைவிக்கக் கூடியதும், விவசாயிகளுக்கு லாபம் தரக்கூடியதும்,நம் மாவட்டச் சூழலுக்கு ஏற்றதுமான,கருப்புக்கவுனி, யானைக்கொம்பன், மிளகி, தங்கச்சம்பா,குழியடிச்சான்,தூயமல்லி போன்ற பாரம்பரிய நெல்ரகங்களை நம் மாவட்ட விவசாயிகள் மத்தியில் பரவலாக்கம் செய்ய வேண்டும். குறிப்பாக ஆவுடையார்கோவில் பகுதியில் செலவில்லாத பாரம்பரிய நெல்லை பரவலாக்கம் செய்ய வேண்டும். மேலும், குடுமியான்மலை விவசாயக்கல்லூரி மாணவ,மாணவிகளை இதுபோன்ற

அரிய நெல்ரகங்களை களப் பார்வையிடச் செய்ய வேண்டும். இயற்கையைப் பாதுகாத்து, மக்களுக்கு நஞ்சில்லாத உணவை அளித்து வரும் விவசாயிகள் பாராட்டுக்குரியவர்கள் என்றார்.

இதுகுறித்து விவசாயி சி. அப்பாவு பாலாண்டார் கூறுகையில்,இன்றைய சூழலில்,மாவட்டத்தில் 15-க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்களை, கடந்த 5 ஆண்டுகளாக விவசாயிகள் தொடர்ச்சியாக பயிரிட்டு பாதுகாத்து வருகின்றனர் என்றார்.

இதுகுறித்து இயற்கை விவசாயம் செய்யும் தொண்டு நிறுவனர் ஏ. ஆதப்பன் கூறியது: தாய்ப்பாலை அதிகரிக்க கிச்சிலி,குடல் புண்ணுக்கு குடவாழை,மூட்டுவலிக்கு கருப்புக்கவுனி,போக சக்தியைக் கொடுக்கும் கறுங்குறுவை என ஒவ்வொரு ரக நெல்லுக்கும் ஒவ்வொரு மருத்துவ குணங்கள் இருக்கிறது. புதுகை இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் கருப்புக்கவுனி ரக நெல்லை ரூ.3,600 வரை விலை கொடுத்து வாங்கி,மதிப்புக் கூட்டி விற்பனை செய்து வருகிறது என்றார். இதில், புதுகை வேளாண் துணை இயக்குநர் த. சந்திரசேகரன், புதுகை இயற்கை விவசாய உற்பத்தியாளர் கம்பெனியின் இயக்குநர் விஜயா, முதன்மை செயல் அலுவலர் அகிலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## விண்வெளி ஆய்வகத்தில் ஜினியா பூ பூத்திடுச்சு!



நாசா உள்ளிட்ட பல விண்வெளி அமைப்புகள் இயக்கிவரும் சர்வதேச விண்வெளி ஆய்வுக்கூடத்தில், முதல் முதலாக பூச்செடிகளை பயிரிட்டுள்ளனர் விஞ்ஞானிகள் என, ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தோம். அவை வளர்ந்து தற்போது பூ பூத்துள்ளன. சூரியகாந்தி பூவின் சாயலில் இருக்கும் அந்த பூவை ஜினியா பூ என்கின்றனர். இது, மருத்துவ குணம் கொண்டது. விண்வெளியில் முழுவதுமாக மலர்ந்த, முதல் பூவும் இதுதான்.

**நீர் ஆதாரத்தை பாதுகாக்க கசிவுநீர் குட்டை அமைப்பு**

உத்திரமேரூர் : பழவேரி மலையடிவார பகுதி யில், நீர் ஆதாரத்தை பாதுகாக்கும் வகையில், கசிவுநீர் குட்டை அமைக்கும் பணி துவங்கியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்ட, நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, கிராமங்களில் நீர் ஆதாரங்களை பாதுகாத்து, நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க திட்டமிட்டது. அதன்படி, கிராமங்களில் உள்ள, நீர் ஓடை, வரத்துக் கால்வாய்களில், தடுப்பணை மற்றும் கசிவுநீர் குட்டைகள் ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.அந்த திட்டத்தின் மூலம், மழைநீர் சேமிக்கப்படுவதோடு, கோடை காலங்களில், கால்நடைகளுக்கு நீரும் கிடைக்கும். உத்திரமேரூர் ஒன்றியத்தில், பழவேரி, ரெட்டமங்கலம், அரும்புலியூர், ஆலஞ்சேரி போன்ற கிராமங்களில், தற்போது இத்திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. பழவேரி மலை நீரோடை பகுதி யின் தாழ்வான இடத்தில், தலா, 75 ஆயிரம் ரூபாய் செலவில், இரு இடங்களில், கசிவு நீர் குட்டைகள் அமைக்கும் பணி நேற்று துவங்கியுள்ளது.

**துவங்கியது கரும்பு நடவு**

ஆர்.கே.பேட்டை : முதல்கட்ட கரும்பு அறுவடை, இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அடுத்த பருவத்திற்கான நடவு பணிகளை விவசாயிகள் துவக்கி உள்ளனர்.

கரும்பு அறுவடை முடிந்த வயல்களில், அடுத்த பருவத்திற்கான நடவுப்பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். ஒரு முறை நடவு செய்த கரும்பு வயலில், அடுத்தடுத்து மூன்று முறை, அறுவடை செய்யலாம்.அதன் பின், புதிதாக நடவு செய்தால் மட்டுமே நல்ல

விளைச்சல் இருக்கும். இதற்காக, தரமான விதைக் கரும்புகளை, தேடித்தேடி வாங்கி வருகின்றனர். ஒரு டன் விதைக் கரும்பு, 2,700 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.ஆர்.கே.பேட்டை அடுத்த, அப்பல்ராஜி கண்டிகை பகுதியைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள், அதிக சாறு நிறைந்த கரும்பு ரகங்களை வாங்கி, நடவு செய்து வருகின்றனர்.

**நவரைப்பட்ட நடவுப்பணி தீவிரம்**

ஊத்துக்கோட்டை : நவரைப்பட்ட சாகுபடி காலம் துவங்கி உள்ள நிலையில், விவசாயிகள் நடவுப்பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில், முக்கிய தொழில் விவசாயம். இதில், நவரைப்பட்டம், சொர்ணவாரி, சம்பா ஆகிய மூன்று காலங்களில், விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.தற்போது, நவரைப்பட்ட காலம் துவங்கியுள்ள நிலையில், விவசாயிகள் நெல் நாற்றுகளை நடவு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.இதுகுறித்து, பூண்டி ஒன்றியம், வேளகாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், 'விவசாயத்தில் மூன்று பருவங்களில் செய்யப்படும் பயிர்களில், தற்போது நவரைப்பட்டை காலம் டிசம்பர் மாதம் துவங்கி, ஏப்ரல் மாதம் வரை உள்ளது.எனவே, நவரைப்பட்ட காலம் துவங்கி உள்ள நிலையில், வயலில் நாற்று நடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

சில இடங்களில் ஓரிடத்தில் நாற்றுவிட்டு, பின், அதை எடுத்து வேறொரு வயலில் நடும் பணி நடைபெறும். இப்போது நடப்படும் நாற்று கள் அதிகபட்சமாக, 120 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும்.சமீபத்தில் பெய்த கனமழையால், ஆறு, குளம், ஏரி உள்ளிட்ட நீர்நிலைகளில், தண்ணீர் நிரம்பி உள்ளது. மேலும், நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

அதனால், இந்தாண்டு விளைச்சல் அதிகளவில் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**விவசாய கருவி தயாரிப்பு: அசத்தும் வட மாநிலத்தவர்**

மொடக்குறிச்சி: மொடக்குறிச்சி சுற்றுவட்டார பகுதிகளில், வட மாநிலத்தவர்கள் விவசாய கருவிகளை நேரடியாக உற்பத்தி செய்து தருவதால், விவசாயிகள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.

தமிழகம் முழுவதும் உள்ள விவசாய பகுதிகளை குறி வைத்து வட மாநிலத்தவர்கள், ஆண்டுதோறும் சாலையோரங்களில் கூடாரம் அமைத்து, விவசாய கருவிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர்.

இதுகுறித்து, மொடக்குறிச்சியில் முகாமிட்டுள்ள, வட மாநிலத்தை சேர்ந்த பப்பு கூறியதாவது: மத்தியபிரதேசம், ஜோத்பூர், ராஜஸ்தான் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து தமிழகத்திற்கு விவசாய கருவிகள் உற்பத்தி செய்து விற்பனை செய்ய, ஐந்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வந்துள்ளோம். தமிழகம் முழுவதும் உள்ள டெல்டா விவசாய பகுதிகளில், எங்கள் ஆட்கள் விவசாய கருவிகளை விற்பனை செய்கின்றனர். மண்வெட்டி, மஞ்சள்வெட்டி, கத்தி, கோடாரி, களைக்கொத்து, இறைச்சி வெட்டும் கத்தி, வெற்றிலை கத்தி, பட்டா கத்தி, கரும்பு வெட்டும் கத்தி ஆகியவைகளை தயார் செய்கிறோம். கடந்தாண்டு அக்டோபர் மாதத்தில் பல பகுதிகளில் தொடங்கி, இன்னும் மூன்று மாதம் வரை தமிழகத்தில் இருந்து, விற்பனை செய்தபின், மீண்டும் எங்கள் ஊருக்கு சென்று விடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

**கவாத்து செய்த தேயிலை தோட்டங்களில் துளிர்**

மஞ்சூர்: தேயிலை தோட்டங்களை நல்ல சீதோஷ்ண நிலையில் கவாத்து செய்ததால், தோட்டங்களில் பசுந்தேயிலை துளிர்விட்டுள்ளது.

மஞ்சூர் பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நல்ல மகசூல் பெற, தேயிலை தோட்டங்களை சரியான காலகட்டத்தில் கவாத்து செய்வது அவசியம். அதன்படி, மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் அக்டோபர் மாதங்களில் கவாத்து செய்த தேயிலை தோட்டங்கள் துளிர் விட்டுள்ளது. இன்னும் ஒன்றரை மாதத்தில், பசுந்தேயிலை அறுவடைக்கு தயாராகிவிடும் சூழ்நிலை உள்ளது.

**கோடைக்கு முன் பூத்த கொன்றை மலர்கள்**

கூடலூார்: முதுமலையில் கோடைக்கு முன், கொன்றை மலர்கள் பூத்துள்ளன.

ஒவ்வொறு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் சித்தரை முதல் நாளில் மலையாள மக்கள், விஷூ பண்டிகையை கொண்டாடி வருகின்றனர்.

இந்த பண்டிகையில், கொன்றை மலர்களுக்கு முக்கியதுவம் உண்டு. இதனால், விஷூ பண்டிகையில் போது, இந்த பூக்கள் கடைகளில் அதிகளவில் விற்பனையாகும். தற்போது, கூடலுார், முதுமலை புலிகள் காப்பகம் பகுதிகளில், கோடை காலத்துக்கு முன்னதாகவே, கொன்றை மலர்கள் பூத்துள்ளன. இதன் அழகை சுற்றுலா பயணிகள், ஆர்வத்துடன் ரசித்து செல்கின்றனர்.

கூடலுார் மக்கள் கூறுகையில், 'கொன்றை மலர்கள் கோடை காலமான ஏப்ரல், மே மாத்தில் அதிகளவில் பூக்கும். ஆனால், இந்த ஆண்டு முன்னதாகவே, பூத்துள்ளன. இதனால், விஷூ பண்டிகையின் போது, இம்மலர்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட வாய்ப்புள்ளது' என்றனர்.

**விவசாயிகள் மனம் வைத்தால் ஆமணக்கும் 'மணக்கும்'**

கோத்தகிரி: நீலகிரி மாவட்டத்தில், ஆமணக்கு சாகுபடியை ஊக்குவித்தால், விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படும்.

நீலகிரியின் பிரதான தொழில், தேயிலை விவசாயம். எஞ்சியுள்ள விளை நிலங்களில், மலைக்காய்கறி மற்றும் கொய்மலர் சாகுபடி செய்யப்படுகிறது.சந்தையில் விலை சரிவு, இடுப்பொருட்களின் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால், விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த பாதிப்பில் இருந்து விடுபட கண்டிப்பாக மாற்றுத்தொழிலுக்கு மாற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**கொட்டைமுத்துச் செடி**

இந்த செடியின் பெயரிலேயே 'முத்து' இருப்பதால், அதன் சிறப்பு அதிகம். இதற்கு மற்றொரு பெயர் ஆமணக்கு ஆகும்.வளமற்ற மண்ணிலும் வளரும் தன்மைக்கொண்ட, ஆமணக்கின் தண்டுப்பகுதி எரிப்பொருளாகவும், கூரை வேயவும் பயன்படுகிறது. வெயிலில் அதன் இலைகள், குளிர்ச்சி தருவதால், வெண்டை, மிளகாய், கத்திரிக்காய் உள்ளிட்ட விவசாயத்தில் பாத்திகளில் ஆமணக்கு பயிரிடப்படுகிறது. தோல் கட்டி, புண் ஏற்பட்டிருப்பின், ஆமணக்கு இலையை சாறு பிழிந்து கட்டினால் குணமாகும்.

இதில், முக்கிய அம்சமாக, விளக்கெண்ணைய் தயாரிக்கலாம். அந்த எண்ணெய் பல்வேறு பயன்களை தருகிறது.

**விழிப்புணர்வு அவசியம்**

நீலகிரியில் உள்ள விவசாயிகளுக்கு ஆமணக்கு விவசாயத்தில் போதிய விழிப்புணர்வு இல்லாததால், பல இடங்களில் வளர்ந்துள்ள ஆமணக்கு,

வீணாகி வருகிறது. இதர விவசாய பயிர்கள்போல், குரங்கு உள்ளிட்ட விலங்குகளால், ஆமணக்கு சேதம் அடைய வாய்ப்பில்லை. பராமரிப்பு செலவும் மிக குறைவாகும். தோட்டக்கலை துறை ஆமணக்கு விவசாயத்தை ஊக்குவித்தால், தேயிலை மற்றும் காய்கறி விவசாயம் நலிவடையும் நேரங்களில், இதனை விற்பனை செய்து, விவசாயிகள் பிழைக்க வாய்ப்புள்ளது.

தோட்டக்கலை இணை இயக்குனர் மணி கூறுகையில், “பரவலாக வளரக்கூடிய ஆமணக்கு விவசாயம், கடந்த காலங்களில் அதிகளவில் விளைவிக்கப்பட்டது. தற்போதும், ஆமணக்கு செடிகள் மாவட்டம் முழுவதும் செழித்து வளரும்.

ஆமணக்கு எண்ணெய் சிறப்புமிக்கது. அதன் கழிவு, உரமாகவும் பயன்படும். இதனை உற்பத்தி செய்ய விவசாயிகள் முன்வந்தால், தோட்டக்கலைத்துறை விதை வழங்கி ஊக்குவிக்கும். அதன் எண்ணெய்யை விற்னை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்,” என்றார்.

**மக்காச்சோளத்தை தாக்கும் தண்டழுகல் நோய்**

திண்டுக்கல், ஜன. 21-மக்காச்சோளத்தை தாக்கும் "ப்யூசேரியம்' தண்டழுகல் நோயை கட்டுப்படுத்த ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பரமசிவன் மற்றும் சேதுராமன் ஆலோசனை கூறினர். அவர்கள் கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோளம் பிரதான பயிராக உள்ளது. மக்காச்சோளம் பயிர், மண் மூலம் பரவும் "ப்யூசேரியம்' தண்டழுகல் நோயினால் பாதிக்கப் படுகிறது. இந்நோய் பாதித்தால் தண்டின் உள்பகுதியில் உள்ள திசு சேதமடையும். இதனால் தண்டு பகுதி மிருது வாகவும், கணுக்கள் முறுகியும் காணப்படும். பூத்தபின் இந்நோய் வந்தால், வேரையும், தண்டின் உட் பகுதியையும் தாக்கும். இதனால்

சோள கதிருக்கு நீர் கிடைக்காமல் காய்ந்து, கீழ்நோக்கி தொங்கிவிடும். நோய் காரணம்: தொடர்ந்து ஒரே பயிரை பயிரிடுவதாலும், மக்காச் சோளத்தை தொடர்ந்து கரும்பு, பருத்தி, தக்காளி பயிரிடுவதாலும் ஏற்படுகிறது. அறுவடைக்கு பின் தட்டை நன்கு மட்காமலிருந்தாலும் இப்பாதிப்பு வரலாம். பூக்கும் போது அதிகமான வெப்பமான நிலை இருந்தாலும் தாக்கம் அதிகமாக இருக்கும்.இதனை தடுக்க, பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்க வேண்டும். நோய் தாக்குதல் உள்ள இடத்தில் இருந்த விதைகளை பயிரிடக்கூடாது. தண்டு மற்றும் கதிர் துளைப்பான் பூச்சி தாக்குதல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வயலில் கடைசி உழவின் போது "ட்ரைக்கோடெர்மாவிரிடி' அல்லது "சூடோமோனாஸ் புளோர சன்ஸை' ஏக்கருக்கு ஒரு கிலோ மற்றும் 50 கிலோ சாணத்துடன் கலந்து வயலில் இட வேண்டும். வேப்பம் புண்ணாக்கு ஏக்கருக்கு 60 கிலோ என்ற அளவில் வயலில் இடுவதின் மூலம் தடுக்கலாம். விவசாயிகள் இனி வரும் காலங்களில் முன்னெச்சரிக்கையுடன் நடக்க வேண்டும், என்றனர்.

**விவசாயிகளுக்கு இலவச மரக்கன்று**

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை ஸ்ரீமுருகப்பா செட்டியார் ஆராய்ச்சி மையத்தின் மூலம் விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

உளுந்தூர்பேட்டை ஸ்ரீமுருகப்பா செட்டியார் ஆராய்ச்சி மையத்தின் மூலம் கிராமப்புற பசுமை வளர்ச்சி திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப் பட்டது. அதன்படி அயன்வேலூர், மேல்தணியாலம்பட்டு, உ.கீரனூர் ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங் கும் நிகழ்ச்சி நடந்தது.

இந்நிகழ்ச்சிக்கு துணை வனக்காப்பாளர்(ஓய்வு) ராஜசேகர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு, மரகன்றுகளை வழங்கினார். திட்ட விரிவாக்க அலுவலர் சக்கரபாணி, கள ஒருங்கிணைப்பாளர் கார்த்திக், கள அலுவலர் சின்னதுரை, விவசாயிகள் கணேஷ், காமாட்சி, வேலாயுதம், வாசு, சரஸ்வதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மக்காச்சோளம் விளைச்சல், விலை... விவசாயிகள் மகிழ்ச்சி**

போடி : - மாவட்டத்தில் கடந்தாண்டை விட இந்தாண்டு மக்காச்சோளம் விளைச்சல், விலை அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் போடி, மீனாட்சிபுரம், அம்மாபட்டி, பத்திரகாளிபுரம், டொம்புச்சேரி, பெருமாள் கவுண்டன்பட்டி, அணைக்கரைப்பட்டி, ராசிங்காபுரம், பூதிப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் 10,000 ஏக்கருக்கு மேல் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். கடந்தாண்டு டிசம்பர்- ஜனவரியில் மக்காச்சோளம் போதுமான அளவிற்கு விளைச்சல் இருந்தும் விலை இல்லாமல் போனது. சமீபத்தில் பெய்த மழை மற்றும் நோய் தாக்குதல் ஏற்படாததால் பெரும்பாலான விவசாயிகள் மற்றபயிர்களை காட்டிலும் மக்காச்சோளம் அதிகளவில் பயிரிட்டுள்ளனர். இதனால் கடந்த ஆண்டை காட்டிலும் இந்தாண்டு விளைச்சல் அதிகரித்துள்ளது. தற்போது மக்காச்சோளம் குவிண்டால் ரூ.1,400 முதல் 1, 600 வரை விலை போகிறது. கடந்த ஆண்டை காட்டிலும் குவிண்டாலுக்கு ரூ. 400 முதல் 500 வரை அதிகரித்துள்ளது. விளைச்சல், விலையும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.அவர்கள் கூறுகையில், "மக்காச்சோளத்தை பொறுத்தவரை பாப்கான் தயாரிக்கவும், பதப்படுத்தப்பட்டு வேக வைத்து சாப்பிட மக்கள் பயன்படுத்துவதோடு, சத்து மாவு தயாரிக்க பல்வேறு நிறுவனங்கள் மொத்தமாக கொள்முதல் செய்து வருகின்றன. இதனால் மக்காச்சோளம் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டப்படுகிறது. கடந்தாண்டு இதே காலகட்டத்தில் மக்காச்சோளம் குவிண்டால் ரூ.1,100

முதல் 1, 200 என விலை இருந்தது. தற்போது ரூ.1, 400 முதல் ரூ. 1, 600 வரை விவசாயிகளிடம் வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்,"என்றார்.

**நெல்லில் குலைநோய் தாக்குதல்**

தேவதானப்பட்டி, :ஜெயமங்கலம், பொம்மிநாயக்கன்பட்டியில் நெல் வயல்களில் குலைநோய் தாக்கியுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.பெரியகுளம் ஒன்றியம் ஜெயமங்கலம், அ.வாடிப்பட்டி, மேல்மங்கலம், மருகால்பட்டி கிராமங்களில் விவசாயம் முக்கியத் தொழில். நடப்பு பருவத்தில் போதிய அளவு மழை பெய்தது. மருகால்பட்டி சிறுகுளம்,சில்வார்பட்டி சிறுகுளம், பொம்மிநாயக்கன்பட்டி புதுக்குளம், ஜெயமங்கலம் வேட்டுவன்குளம் கண்மாய்கள் நிறைந்தன. நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து விவசாய கிணறுகளில் நீர் ஊற்றுக்கிடைத்தது. இதனால் 3 ஆண்டுகளுக்கு பிறகு இக்கிராமங்களில் 3,000 ஏக்கர் பரப்பளவில் முதல்போக நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளன. கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நெல்நடவுப்பணி துவங்கியது. தற்போது கதிர் வெளியேறி வருகிறது. சில இடங்களில் சினைப்பருவத்தில் கதிர்கள் உள்ளன. ஜெயமங்கலம் உட்பட பல இடங்களில்கதிர் வெளியேறி பால்பிடிக்கும் பருவத்தில் குலைநோய் தாக்கியுள்ளது. இதனால் நெல்மணிகள் சண்டாக காணப்படுகிறது. பலன் கிடைக்கும் நிலையில் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.அவர்கள் கூறுகையில்,"பெரியகுளம் தாலுகா பகுதியில் முதல் போக நெல் சாகுபடிப் பணிகள் முழுவீச்சில் நடந்துள்ளது. குலை நோய்தாக்குதலால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு ஏக்கருக்கு 25,000 ரூபாய் வரை செலவானதால் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட வயல்களை பார்வையிட்டு நோய் தடுப்பிற்கான ஆலோசனை கூறவில்லை, என்றனர்.

**வெங்காயம் விளைச்சல் அமோகம்**

ஆர்.எஸ்.மங்கலம்,:ஆர்.எஸ்.மங்கலம் அருகே செங்குடி, புல்லமடை, பூலாங்குடி, சேத்திடல் சீனங்குடி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் சின்ன வெங்காயம் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றை மிளகாய் செடிகளுக்கு இடையே ஊடுபயிராக விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது இவை அறுவடை தருவாயில் உள்ளது. மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**ஆண்டு முழுவதும் சாகுபடிக்குகம்புநேப்பியர் ஒட்டுப்புல்**

ராமநாதபுரம்,:கால்நடை தீவனப்பயிரான கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்லை ஆண்டு முழுவதும் பயிரிடலாம் என, விவசாயத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.அவர்கள் கூறியதாவது: கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்லை அனைத்து வகை மண்ணிலும் சாகுபடி செய்யலாம். ஆண்டு முழுவதும் பயிரிடலாம். அவற்றை சாகுபடி செய்ய நிலத்தை 3 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். எக்டேருக்கு 25 டன் தொழு உரமிட வேண்டும். 60 செ.மீ., இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். எக்டேருக்கு 150 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, 40 கிலோசாம்பல் சத்து இட வேண்டும். நன்கு நீர் பாய்ச்சிய பின் இருபரு கொண்ட தண்டுக்கரணை அல்லது வேர்க்கரணையை 60க்கு 50 செ.மீ., இடைவெளியில் செங்குத்தாக நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 30 வது நாளில் 50 சதவீதம் தழைச்சத்து உரங்களை இட வேண்டும். ஒவ்வொரு அறுவடைக்கு பின்பும் 75 கிலோ தழைச்சத்தை அடியுரமாக இட வேண்டும். எக்டேருக்கு தழை, மணிச்சத்தின் அளவில் 75 சதத்துடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியாவை தலா 2 கிலோ, 4 கிலோ அசோபாஸை கலந்து இட வேண்டும். இதன்மூலம் உரச் செலவு

குறையும். பத்து நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். 80 நாட்களில் முதல் அறுவடையும், அடுத்தடுத்து 45 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யலாம். எக்டேருக்கு 400 டன் வரை மகசூல் கிடைக்கும், என்றனர்.

**சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கவிவசாயிகளுக்கு அரசு மானியம்**

சிவகங்கை,:சிவகங்கை மாவட்டத்தில் சொட்டுநீர்ப்பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கப்படுவதாக கலெக்டர் மலர்விழி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:பிரதமரின் விவசாய நீர்பாசன திட்டத்தின் கீழ், சிவகங்கை மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. பயிர்களின் இடைவெளிக்கு ஏற்றவாறு ஒரு விவசாயிக்கு எக்டேருக்கு ரூ.85 ஆயிரத்து 400 வீதம் அதிகபட்சமாக 5 எக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது.இதில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் ஆகும். இதற்காக மாவட்டத்தில் இந்த ஆண்டு சொட்டு நீர் பாசனமும், தெளிப்பு நீர் பாசனமும் அமைக்க ஆதி திராவிட விவசாயிகளுக்கு ரூ.46.33 லட்சமும், பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.2.43 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் நில ஆவணங்கள், ரேஷன் கார்டு, ஜாதிச்சான்றுகளுடனும், சிறு மற்றும் குறு விவசாயிகள் தாசில்தார் சான்று,பாசன ஆதாரச்சான்று, மண் மாதிரி மற்றும் நீர்பாசன ஆய்வு முடிவுகளை தங்களது பகுதி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தையும், சிவகங்கையில் உள்ள தோட்ட கலைத்துறை அலுவலகத்தையும் அணுகி பயனடையலாம். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

**விவசாயிகள்குறைதீர் கூட்டம்**

சிவகங்கை, :விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜன.,29 அன்று காலை 11:30 மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும். இதில், விவசாயிகள், இத்துறை சார்ந்தவர்கள் குறைகளை தெரிவிக்கலாம், என கலெக்டர் மலர்விழி தெரிவித்தார்.

**நூறு மல்லிகைப்பூ ரூ.100**

காரைக்குடி, :காரைக்குடியில் நேற்று முகூர்த்த நாள் என்பதால், பூக்கள் விலை பல மடங்கு ஏறியது.ஒரு கடையை தவிர மற்ற கடைகளில் பூ விற்பனை இல்லாததால், விசேஷம் நடத்தியவர்கள் திருப்பத்தூர், தேவகோட்டை, மதுரைக்கு சென்று பூ வாங்கி வந்தனர். காரைக்குடி பூ வியாபாரிகள் தங்களுக்குள் உள்ள ஒப்பந்தப்படி,தமிழ் மாதத்தின் ஒவ்வொரு முதல் செவ்வாயன்றும்,அனுமதிக்கப்பட்ட ஏதாவது ஒரு கடையை தவிர மற்ற கடைகளில் பூவோ, மாலையோ விற்பதில்லை என முடிவு செய்துள்ளனர். இதன்படி நேற்று முன்தினம் தை முதல் செவ்வாய் என்பதால், காரைக்குடி கொப்புடையம்மன் கோயில் பகுதியில் உள்ள ஒரு கடையில் மட்டும் பூ விற்பனை நடந்தது. நேற்று முகூர்த்த நாள் என்பதால், விசேஷ வீட்டார் பூவுக்காக இவர்களை நாடிய போது, நூறு மல்லிகை பூ ரூ.100-க்கு விற்பனையானது. திருமண வீட்டு பெண்களுக்கு பூ வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் ஒரு சிலர் ஆயிரக்கணக்கில் கொடுத்து வாங்கிச் சென்றனர். சிலர் தேவகோட்டை,திருப்பத்தூர், மதுரைக்கு சென்று வாங்கினர். காரைக்குடி பூ வியாபாரிகள் சங்க தலைவர் முருகானந்தத்திடம் கேட்டபோது, "ஒரு கடை மட்டும் விற்பனை என்ற குத்தகை நடைமுறை 49 ஆண்டுகளாக உள்ளது. குத்தகைக்காக வசூலிக்கும் பணத்தில் சங்க நிர்வாகிகள் எந்த

பங்கும் எடுப்பது கிடையாது. கொப்புடையம்மன் கோயில் திருவிழா நேரங்களில் பூ அலங்காரம்,அன்னதானத்துக்கு செலவிடுவோம். அனுமதிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்கக்கூடாது என, ஏற்கனவே பூ வியாபாரிகளிடம் வலியுறுத்தியுள்ளோம். வாடிக்கையாளர்களிடமும் கடிந்து பேசக்கூடாது எனவும் கூறியுள்ளோம்,என்றார்.

காரைக்குடி பாலசுப்பிரமணியன் கூறும்போது: பூ வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து செயல்படுகின்றனர். திடீரென இதுபோன்று இக்கட்டான நிலை உருவாவதால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். எந்த வியாபாரத்திலும் இந்நிலை கிடையாது,என்றார்.

## விவசாயிகளுக்கு தொழில் பயிற்சி

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை கோவிலாங்குளம் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில், தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை சார்பில், விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் ஹேமா வரவேற்றார். பேராசிரியர்கள் ராஜேந்திரன் , சரவணக்குமார் ,டாக்டர் குமார் , தோட்டக்கலை உதவி இயக்குனர் ராதாகிருஷ்ணன் பேசினர். அலுவலர் சுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**பிரமிக்க வைக்கும் பூஞ்சை ராஜ்ஜியம்!**



பூஞ்சைகள் மட்டும் இல்லையென்றால், இந்த பூமியே இல்லை. என்ன, நம்ப முடியவில்லையா? அதுதான் உண்மை. பூஞ்சைகள் பற்றிய அசத்தலான தகவல்கள் இதோ...

இயற்கை அன்னை திரைமறைவில் நடத்தும் ஏகப்பட்ட அற்புதங்களில் பூஞ்சைகளும் ஒன்று. அது ஒரு திரைமறைவு ராஜ்ஜியம். நாம் பார்க்கும் காளான்கள், பூஞ்சைகளின் பழம் போன்ற பாகமாகும். பூஞ்சைகள், பூமி முழுவதும் வியாபித்திருக்கின்றன. பூமியின் எல்லாப் பகுதி சூழலிலும் ஜீவிக்கும் அசாத்திய சக்தி பெற்றவை இவை. குளிர், பனி, வெயில் என எதுவும் இதற்கு பொருட்டில்லை! தாவரங்கள், மிருகங்கள் என்று அனைத்து உயிரினங்களின் மீதும் வளரும் இயல்புடையது பூஞ்சை.பல ஆண்டுகளாக பூஞ்சைகள், தாவர ராஜ்ஜியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

பின்னர்தான், பூஞ்சைகள் தாவரத்தைவிட மிருகங்களுடன் அதிகளவு ஒத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, பூஞ்சைகள் தனி ராஜ்ஜியமாக பிரிக்கப்பட்டுள்ளன. பூஞ்சைகளைப் பற்றிய அறிவியல் பிரிவுக்கு 'பூஞ்சையியல்' (mycology) என்று பெயர். பூஞ்சைகளிடம் 'க்ளோரோஃபில்' எனப்படும் பச்சையம் கிடையாது. எனவே, தாவரங்களைப் போல் உணவைத் தானே தயாரித்துக்கொள்ள இவற்றால் முடியாது. தாவரங்களின் உயிரணுக்களின் சுவர் செல்லுலோஸால் உருவானது. ஆனால், பூஞ்சைகளின் உயிரணு சுவர் 'கைட்டின்' எனப்படும் மூலப்பொருளால் உருவானது. இந்த கைட்டின் மிருகங்களின் கொம்பு, முடி, மேல் ஓடு போன்றவற்றில் காணப்படும். பூஞ்சைகளின் உயிரணுக்களும் மரபணுக்களும் தாவரங்களைவிட மிருகங்களுடன் ஒத்துப் போகின்றன. பூஞ்சைகளின் உயிருள்ள உடலின் பெயர் 'மைசீலியம்' (mycelium) எனப்படும். 'பூசண வலை' ஆகும் இந்த வலையானது மரம், உணவுப் பொருள் என்று எதற்குள் வேண்டுமானாலும் புதைந்திருக்கும். ஒரு மைசீலியம் ஒரு எலும்பின் அளவில் இருந்து பல ஏக்கர் பரப்பளவு வரை இருக்குமாம். மைசீலியம் என்பது 'ஹைஃபே' (hyphae) இழைகள். ஒரே நாளில் இவை ஒரு கி.மீ. அளவு கூடவளருமாம். பூமியில் 15 லட்சம் முதல் 50 லட்சம் வரை பூஞ்சை வகைகள் வாழ்கின்றன. கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய அளவிலிருந்து பல மைல் அளவு வரை பூஞ்சைகள் காணப்படுகின்றன. பூஞ்சைகள், கண்ணுக்குப் புலப்படாமல் ஒரு நூற்றாண்டு வரைகூட செயலற்று இருந்துவிட்டு, பின் வளரும் திறனுடையவை. பூசணம் (அ) காளான்களாக விருத்தியடையும்போதுதான் அது நம் கண்ணுக்குப் புலப்படும். பூஞ்சைகள் உணவுக்காக மற்றவற்றைச் சார்ந்தே இருக்கும். சில பூஞ்சைகள், மண்ணிலிருந்து உணவை எடுத்துக்கொள்ளும். சிலவகை பூஞ்சைகள் பிற உயிரினங்களையோ, உயிரற்ற பொருளையோ உணவுக்காக சார்ந்திருக்கும். ஒட்டுண்ணிகளும் சிதை மாற்றம் செய்யும் உயிரினங்களும் ஒன்றிய வாழிகளும் பூஞ்சை ராஜ்ஜியத்தில்

இடம்வகிக்கின்றன.

பூஞ்சை இனம் மட்டும் இல்லையென்றால் பூமியில் பல அடி உயரத்திற்கு கழிவுகள் நிரம்பியிருக்கும். குப்பைகள், வாடிய தாவர பாகங்கள், இறந்த மிருகங்கள் போன்றவை பூஞ்சைகளின் தாக்கத்தால் மறுசுழற்சி பெற்று வளமான மண்ணாக மாறிவிடும். நீர் நிலைகளில் வாழும் பூஞ்சைகள், அங்கு சேரும் குப்பைகள், கழிவு, எண்ணெய் போன்றவற்றை நொதித்து, நீர்நிலையை மற்ற உயிரினங்கள் வாழத் தகுதியுடையதாய் மாற்றும். இந்த வகையில் அனைத்து உயிரினங்களும் பூஞ்சைகளுக்கு கடன்பட்டிருக்கின்றன. எனவே, பூஞ்சைகளை 'பூமியின் சுற்றுச்சூழலின் முதுகெலும்பு' என்று கூறலாம். 'Spores' எனப்படும் வித்துகள் மூலம் பூஞ்சைகள் இனப்பெருக்கம் செய்யும். காளான், பூசணம் (mold), ஈஸ்ட் ஆகியவை பூஞ்சைகளின் சில வகைகள். உலகின் மிகப்பெரிய உயிரினமான 'தேன் பூஞ்சை' (Honey fungus), அமெரிக்காவின் ஓரிகான் பகுதியில் காணப்படுகிறது. 2200 ஏக்கர் பரப்பளவில் படர்ந்துள்ள இந்த காளான் காலனி, 2400 ஆண்டுகள் பழமையானதாகும். இந்தக் காலனியை ஒற்றை உயிரினமாகக் கணக்கிட்டால் இதுவே உலகின் மிகப்பெரிய உயிரினமாகும். இதன் மொத்த எடை 605 டன்களாகும். உலகின் மிகப்பெரிய காளான், ஹைனன் தீவில் கண்டறியப்பட்டது.

இதன் எடை 500 கிலோ. காளான்கள் மனிதர்களுக்கு ஆரோக்கியமான சுவையான உணவாகும். பிரெட், கேக் ஆகிய உணவுத் தயாரிப்பில் ஈஸ்ட் பயன்படுகிறது. மதுபானங்கள், அமிலங்கள், சாஸ் வகைகள், சீஸ் ஆகிய தயாரிப்புகளிலும் பூஞ்சைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. சில பூஞ்சைகள், பெனிசிலின் போன்ற உயிர்காக்கும் மருந்துத் தயாரிப்பில் உதவுகின்றன. பூஞ்சைகளில் தீமையும் உண்டு. தீய பூஞ்சைகள் உணவைப் பாழாக்குகின்றன. மனிதர்களிலும் தாவரங்களிலும்

நோய்களை உண்டாக்குகின்றன. சில காளான்கள் மனிதனையே கொல்லக்கூடிய விஷம் கொண்டவை.

**பாசனத்திற்காக வீடூர் அணை திறப்பு**

மயிலம், : விழுப்புரம் மாவட்டம், மயிலம் அருகே உள்ள வீடூர் அணை தொண்டியாறு மற்றும் வராக நதி ஆகியவற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணைக்கு 501 அடி சதுர மைல் தூரத்தில் இருந்து தண்ணீர் வருகிறது. ஆயிரத்து 911 ஏக்கர் பரப்பளவில் தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. அணையின் மொத்த நீளம் 15 ஆயிரத்து 800 அடி. அஸ்திவாரத்தில் இருந்து அணையின் உயரம் 62 அடியாகும். நீர்த்தேக்க கொள்ளளவு 605 மில்லியன் கனஅடியாகும். அணையின் முழு நீர்மட்டம் 32 அடியாகும். பிரதான கால்வாயின் நீளம் 17.64 கிலோ மீட்டராகும்.

பருவமழை பெய்த பின் வீடூர் அணையில் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 1ம் தேதியிலிருந்து பிப்ரவரி 12ம் தேதி வரை பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படும். வீடூர் அணையில் இருந்து பாசனத்திற்காக வெளியேற்றப்படும் நீரால் தமிழக விவசாய பகுதிகளான சிறுவை கிளைக் கால்வாய், பொம்பூர் கிளைக்கால்வாய், பொன்னம்பூண்டி கிளைக்கால்வாய், கோரைக்கேணி கிளைக்கால்வாய், கடகம்பட்டு கிளைக்கால்வாய் ஆகியவற்றின் மூலம் சிறுவை, வீடூர், பொம்பூர், பொன்னம்பூண்டி, கோரக்கேணி, ஐவேலி, நெமிலி, தொள்ளாமூர், கடகம்பட்டு, கொண்டலங்குப்பம் பகுதிகளுக்கு 2 ஆயிரத்து 200 ஏக்கர் விவசாய நிலங்களும், புதுச்சேரி மாநிலத்திற்கு புதுக்குப்பம், காட்டேரிக்குப்பம், சுத்துக்கேணி, தேத்தாம்பாக்கம், ரிங்காரெட்டிப்பாளையம் பகுதிகளுக்கு ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பயன் பெறுகின்றன. இந்த அணையில் இருந்து தான் தண்ணீர் புதுச்சேரி ஊசுட்டேரிக்கு செல்கிறது.

வீடூர் அணையில் நேற்று (20ம் தேதி) முதல் வரும் ஜூன் மாதம் 2ம் தேதி வரை 135 நாட்களுக்கு தலைப்பு மதகு பிரதான கால்வாய் மூலம் அதிகபட்சம் வினாடிக்கு 53 கன அடி முதல் குறைந்தபட்சம் 9 கனஅடி வரை பாசனத்திற்குதண்ணீர் திறக்கப்படுகிறது. தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில் வீடூர் அணையை பாசனத்திற்காக நேற்று காலை 10 மணியளவில் விழுப்புரம் மாவட்ட கலெக்டர் லட்சுமி திறந்து வைத்தார். பின்னர் வெளியேறும் நீரை மலர் தூவி வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் மயிலம் ஒன்றிய செயலாளர் சேகரன், வீடூர் அணை செயற்பொறியாளர் கபிலன், மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பன்னீர் செல்வம், புருஷோத்தமன், வீடூர் ஊராட்சி மன்ற தலைவர் ரவி, விழுப்புரம் துணை வேளாண்மை இயக்குனர் ரவி, வேளாண்மை உதவி இயக்குனர்கள் வானூர் துரைசாமி, மயிலம் ராஜசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இறவை நிலக்கடலையில் கூடுதல் மகசூலுக்கு ஊட்டச்சத்து கரைசல் தெளிக்க வேண்டும் வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தல்

அன்னவாசல், : புதுகை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள இறவை நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஊட்டச்சத்துக் கரைசல் இருமுறை தெளிக்க வேண்டுமென வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். புதுகை வேளாண் இணை இயக்குநர் சந்திரசேகரன், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் செல்வி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுகை மாவட்டத்தில் தற்போது இறவை நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுப் பூக்கும் தருணத்தில் உள்ளது. பூக்கும் சமயத்தின்போது பூக்கள் உதிர்வதைத் தடுக்கவும் பூக்கள் மிகுதியாகப் பூக்கவும் ஊட்டச்சத்துக் கரைசல் இலைவழியாகத் தெளிப்பது சிறந்ததாகும்.

ஊட்டச்சத்து கரைசல் தயார் செய்தல்: ஏக்கர் ஒன்றுக்குத் தேவையான ஒரு கிலோ டிஏபி 400 கிராம் அம்மோனியம் சல்பேட், 200 கிராம் போராக்ஸ் ஆகிய 3 உரங்களையும், தெளிப்பதற்கு முதல் நாள் இரவே ஏறத்தாழ 15 லிட்டர் நீரில் ஊறவைத்தல் வேண்டும். இக்கரைசலை அவ்வப்போது நன்கு கலக்கிவிடுதல் வேண்டும். மறுநாள் காலை இக்கரைசலை வடிகட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலை மட்டும் (ஏறத்தாழ 13 லி.) எடுத்து அதனுடன் தேவையான அளவு நீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாகத் தயார் செய்தல் வேண்டும். இக்கரைசலைக் கைத்தெளிப்பான் மூலம் விதைத்த 25ம் நாள் ஒரு முறையும் பின்பு 10 நாட்கள் கழித்து 35ம் நாள் ஒரு முறையும் என இருமுறை இலைகள் நன்கு நனையுமாறு தெளித்தல் வேண்டும். இக்கரைசலுடன் பிளானோபிக்ஸ் எனும் பயிர் வளர்ச்சி ஊக்கியை ஏக்கர் ஒன்றுக்கு 140 மி.லி. எனும் அளவில் கலந்தும் தெளிக்கலாம். ஊட்டச்சத்து கரைசலின் பயன்கள்: ஊட்டச்சத்து கரைசலை நிலக்கடலைக்குத் தெளிப்பதால் பூக்கள் உதிர்வது தடுக்கப்படுகிறது. பூக்கள் மிகுதியாகப் பூப்பதற்கு உதவுகிறது. நன்கு திரட்சியான பொக்கற்ற காய்கள் நிறைய பிடித்து நல்ல மகசூல் கிடைக்கிறது. பயிர் நன்கு வளர்ச்சி பெற்று பூச்சி, நோய்களை எதிர்க்கும் தன்மையைப் பெறுகிறது. உழவர்கள் கவனிக்க வேண்டியவை: பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்களை மட்டும் கரைசலுக்கு பயன்படுத்துதல் வேண்டும். தேவைக்கு மேல் உரங்களை பயன்படுத்தும்போது செடிகள் பாதிக்க வாய்ப்புண்டு. ஊட்டச்சத்து கரைசலைத் தெளிக்கும்போது நிலத்தில் ஈரம் இருப்பது கட்டாயம். எனவே, இறவை நிலக்கடலைச் சாகுபடி செய்யும் உழவர்கள் ஊட்டச்சத்துக் கரைசலைத் தெளித்துக் கூடுதல் மகசூல் பெறலாம். இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

**உளுந்து பயிரில் டிஏபி கரைசல் தெளித்தால் 25 சதவீதம் கூடுதல் மகசூல்**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள உளுந்து பயிரில் 25 சதவீதம் கூடுதல் மகசூல் பெற டிஏபி கரைசல் தெளிப்பது அவசியம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து பயிரில் 25 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெற 2 சதவீத டிஏபி கரைசல் தெளிப்பது மிகவும் அவசியமாகும். ஒரு ஏக்கருக்கு தேவையான 4 கிலோ டிஏபி உரத்தை நன்கு தூள் செய்து 10 லிட்டர் தண்ணீரில் முதல்நாளே ஊறவைத்து நன்கு கலக்கிவிட வேண்டும். மறுநாள் தெளிந்த கரைசலை மட்டும் வடிகட்டி எடுத்து கொண்டு அத்துடன் 190 லிட்டர் தண்ணீர் சேர்த்து மாலை வேளையில் கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும். 35வது நாள் பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 45வது நாள் காய் பிடிக்கும் தருணத்தில் ஒரு முறையும் கரைசல் தயாரித்து 2 முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் மண்ணிலிருந்து நேரடியாக மணிச்சத்தை எடுத்து கொள்ள முடியாத பயிர்கள் டிஏபி கரைசல் மூலமாக இலை வழியாக மணிச்சத்து அளிக்கும்போது பயிர்கள் உடனடியாக மணிச்சத்தை பெறுவதுடன் உருவாகும் பூக்களை எல்லாம் பிஞ்சுகளாக மாறி காய்களாக உருவாகி அதில் உள்ள விதைகள் நல்ல திரட்சியான எடையுடன் கூடிய தரமான மணிகளாக கிடைக்கிறது. இதனால் வழக்கத்துக்கு மாறாக ஒரு ஏக்கரில் 25 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது. எனவே உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் டிஏபி கரைசல் தெளித்து பயன்பெறலாம். மேலும் விவரங்கள் அறிய வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

**23ம் தேதி முதல் 26ம் தேதி வரை நடக்கிறது தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி**

புதுச்சேரி, : புதுவை அரசின் வேளாண் துறை சார்பில் ஆண்டுதோறும் காய்கனி, மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, தாவரவியல் பூங்காவில் காய்கனி, மலர் கண்காட்சி நாளை மறுதினம் (23ம் தேதி) தொடங்குகிறது. இதற்கான துவக்க விழா அன்று மாலை 5 மணியளவில் நடக்கிறது. கவர்னர் ஏ.கே.சிங் துவக்கி வைக்கிறார். முதல்வர் ரங்கசாமி மற்றும் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், அதிகாரிகள் கலந்துகொள்கின்றனர்.

மலர் கண்காட்சிக்கான ஏற்பாடுகளை வேளாண் துறை தோட்டக்கலை துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். கண்காட்சியில் 57 வணிக அரங்குகள் மட்டுமின்றி மீன்வளத்துறை, பால் உற்பத்தி, தேசிய தோட்டக்கலை வாரியம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு துறை சார்பில் 30க்கும் மேற்பட்ட அரங்குகள்அமைக்கப்படுகிறது.

அரங்குகளில் பலவகையான கண்கவர் மலர், காய்கனிகள் மற்றும் பலவித வேளாண் உற்பத்தி பொருட்கள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்படுகிறது. மேலும், வேளாண் உபகரணங்களும் இடம்பெறுகின்றன. தேனீ வளர்ப்பு, காளாண் வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்து செயல்விளக்கம் அளிக்கும் அரங்குகளும் இடம்பெறுகிறது. தாய்லாந்து நாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட ஆர்க்கிட் மலர்கள், ஆந்தூரியன் பூக்கள் மற்றும் பெங்களூரு, பூனா உள்ளிட்ட நாட்டின்

பல்வேறு பகுதிகளில் இருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலர் செடிகள் தருவிக்கப்பட்டுவைக்கப்படுகிறது.

4 நாட்கள் நடைபெறும் கண்காட்சியின் நிறைவு விழா வரும் 26ம் தேதி நடக்கிறது. தானே புயலால் தாவரவியல் பூங்கா சிதிலமடைந்த நிலையில், சீரமைப்பு மற்றும் புதுப்பிக்கும் பணிகள் நடந்ததால் கடந்தாண்டு மார்ச் மாதம் ஏஎப்டி திடலில் செயற்கை ஏசி கூடாரம் போட்டு மலர் கண்காட்சி நடத்தப்பட்டது. இதற்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியது. அடுத்தாண்டு முதல் தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படும் என முதல்வர் ரங்கசாமி உறுதி அளித்திருந்தார். அதன்படி, இயற்கை எழில் சூழ்ந்த தாவரவியல் பூங்காவில் இந்தாண்டு மலர் கண்காட்சி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இன்றைய வேளாண் செய்திகள்

## பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் இன்று நடக்கிறது



பெரம்பலூர் வடக்குமாதவி சாலையில் பைபாஸ்சாலை அருகே ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் உள்ளது. இந்த விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் இன்று (வியாழக்கிழமை) நடக்கிறது. இந்த ஏலத்தில் உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகளும் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் தங்களது வயலில் பருத்தி எடுக்கும் போதே நன்கு வெடித்து மலர்ந்த தூசி சருகு இல்லாத தூய்மையான வெண்மையான பருத்தியை

தனிக்கூடையிலும், நிறம் மாறிய பருத்தியினை வேறொரு கூடையிலும் தனித்தனியாக சேகரிக்கவேண்டும். சேகரித்த பருத்தியினை ஈரப்பதம் 8 சதவீதத்திற்கு குறைவாக இருக்கும் வகையில் நிழலில் நன்கு உலர்த்தி ஒழுங்குமுறை விற்ப்பனைக்கூடத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**21 சதவீத ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய நடவடிக்கை விவசாயிகள் சங்கம் கோரிக்கை**




பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால் 21 சதவீத ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்து உள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவாரூர் மாவட்ட செயலாளர் மாசிலாமணி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

கனமழை

கடந்த ஆண்டு (2014) நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் கன மழை பெய்தது. இதன் காரணமாக சம்பா நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டது. சூல் கட்டும் நிலையிலும், பூக்கும் நிலையிலும், கதிர் வெளி வந்த நிலையிலும் இருந்த இளம் பயிர்கள் மழையால் முழுமையாக அழிந்து விட்டன. எஞ்சிய பயிர்களில் இருந்து மிக மிக குறைவான அளவே மகசூல் கிடைத்து வருகிறது. இந்த நிலையில் திருவாரூர் மாவட்டத்தில் 32 சதவீத பயிர்கள் தான் பாதிப்பு என கூறி மிக குறைந்த அளவே அரசு நிவாரணம் ஒதுக்கி உள்ளது. இது விவசாயிகளை வேதனை அடைய செய்து உள்ளது. மழையால் பயிருக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பை அரசு சரியாக மதிப்பிடவில்லை.

ஈரப்பத அளவு

நெல்லிற்கு உரிய விலையை மத்திய அரசு அறிவிக்கவில்லை. இதுபற்றி தமிழக அரசும் கவலைப்படவில்லை. அறுவடையாகும் நெல்லை கொள்முதல் செய்வதற்கும் உரிய ஏற்பாடு அரசு செய்யவில்லை. எந்திரங்களை மூலமாக மட்டுமே 80 சதவீத அறுவடை நடக்கிறது. தற்போது பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால் நெல்லில் ஈரப்பதம் 21 சதவீதத்திற்கு மேல் உள்ளது.

ஆனால் 17 சதவீத ஈரப்பதத்திற்கு மேல் இருக்கும் நெல்லை கொள்முதல் செய்ய மறுப்பது வேதனை தருகிறது. 21 சதவீதம் வரை ஈரப்பதம் இருக்கும் நெல்லை கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மழையினால் ஏற்பட்ட பாதிப்புகளை முழுமையாக கணக்கிட்டு, ஒரு ஏக்கர் பயிருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது சங்க மாவட்ட தலைவர் ரெங்கராஜன் உடன் இருந்தார்.